**சுருக்கம்**

வேளாண்மை - உழவர் நலன் - சிறப்பு விருது - 2020-2021 - நெல் சாகுபடியில், செம்மை நெல் சாகுபடி தொழில் நுட்பத்தினை கடைபிடித்து மாநிலத்திலேயே அதிக உற்பத்தி திறன் பெறும் விவசாயிக்கு குடியரசு தினத்தன்று மாண்புமிகு முதல்வர் அவர்களால் "திரு. சி. நாராயணசாமி நாயுடு நெல் உற்பத்தித் திறனுக்கான விருது" மற்றும் பரிசு வழங்குதல் - ஆணை வெளியிடப்படுகிறது.

---

**வேளாண்மை - உழவர் நலத் (வே.உ.4) துறை**

**அரசாணை (நிலை) எண். 13** **நாள் : 13.01.2022**

திருவள்ளுவர் ஆண்டு, 2052
பிலவ, மார்கழி 29-ஆம் நாள்

**படிக்க:**

1. அரசாணை (நிலை) எண்.246, வேளாண்மை (வே.உ.4) துறை, நாள் 21.12.2011.
2. அரசாணை (நிலை) எண்.233, வேளாண்மை (வே.உ.4) துறை, நாள் 17.09.2018.
3. அரசாணை (நிலை) எண்.01, வேளாண்மை (வே.உ.4) துறை, நாள் 04.01.2021.
4. அரசாணை (2டி) எண்.03, வேளாண்மை (வே.உ.4) துறை, நாள் 04.01.2021.
5. வேளாண்மை இயக்குநரின் கடித எண்.நெ(ம)சி 3/64170/2020, நாள் 28.08.2021 மற்றும் 25.11.2021.

*****

**ஆணை :**

நவீன தொழில் நுட்பத்துடன் செயல்படுத்தப்படும் திருந்திய நெல் சாகுபடி முறைக்கு அதிக ஊக்கம் அளிக்கும் வகையில் மாண்புமிகு முன்னாள் வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் 2011-2012-ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையின் போது வெளியிட்ட அறிவிப்பிற்கிணங்க, மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், நெல் சாகுபடியில், திருத்திய நெல் சாகுபடி தொழில் நுட்பத்தினைக் கடைபிடித்து மாநில்த்திலேயே அதிக உற்பத்தி திறன் பெறும் விவசாயிக்கு ஒவ்வொரு ஆண்டும் குடியரசு தினத்தன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் சிறப்பு பரிசுத் தொகை ரூ.5.00 இலட்சம் (Special Award) மற்றும் ரூ.3,500/- மதிப்புடைய வெள்ளிப்பதக்கம் வழங்க ஆணையிடப்பட்டு இதற்கான விதிமுறைகளும் வெளியிடப்பட்டுள்ளன. மேலும், இப்போட்டி தொடர்பான பயணப்படி செலவுக்காக ரூ.10,000/- உட்பட, மொத்தம் ரூ.5,13,500/- ஒப்பளிப்பு செய்தும் ஆணை வெளியிடப்பட்டு 2011-2012 ஆம் ஆண்டு முதல் பரிசுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

(த.பி.பா.)

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், திருந்திய நெல் சாகுபடி தொழில்நுட்பத்தினைக் கடைபிடித்து மாநில அளவில் நடைபெறும் பயிர் விளைச்சல் போட்டிக்கான கடைசி தேதியை ஏப்ரல் 15-ஆம் நாள் வரை நீட்டித்தும், தங்கமுலாம் பூசப்பட்ட வெள்ளிப் பதக்கம் தயார் செய்திட ஒதுக்கப்பட்டு வரும் நிதி ரூ.3,500/-க்கு பதிலாக, ரூ.5,000/-ஆக உயர்த்தி வழங்கியும் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

3. மேலே மூன்று மற்றும் நான்காவதாக படிக்கப்பட்ட அரசாணைகளின்படி, 2019-2020-ஆம் ஆண்டு நெல் சாகுபடியில், திருந்திய நெல் சாகுபடி தொழில் நுட்பத்தினைக் கடைபிடித்து, மாநில அளவில் அதிக உற்பத்தித் திறன் பெற்றுள்ள விருதுநகர் மாவட்டம், திருவில்லிபுத்தூர் வட்டாரம், வடக்கு திருவில்லிபுத்தூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. க. செல்வகுமார், த/பெ. திரு. கணபதி, என்ற விவசாயிக்கு "திரு. சி. நாராயணசாமி நாயுடு நெல் உற்பத்தித் திறனுக்கான விருது" முன்னாள் முதலமைச்சர் அவர்களால் 26.01.2021 அன்று நடைபெற்ற குடியரசு தின விழாவில், சிறப்பு பரிசுத் தொகை ரூ.5.00 இலட்சம் மற்றும் ரூ.7,000/- மதிப்புடைய தங்கமுலாம் பூசப்பட்ட வெள்ளிப் பதக்கமும் வழங்கப்பட்டது. மேலும், மாநில அளவில் நடைபெறும் திருந்திய நெல் சாகுபடி முறை பயிர் விளைச்சல் போட்டி பரிசுத்தொகை, தங்கமுலாம் பூசப்பட்ட வெள்ளிப் பதக்கம் மற்றும் இது தொடர்பான பயணப்படி செலவுக்காக (விருதுக்கான விவசாயியை தேர்வு செய்யும் குழுவில் உள்ள விவசாய உறுப்பினர்கள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட விவசாயி ஆகியோரின் பயணம் உட்பட) ரூ.10,000/- உட்பட, மொத்தம் ரூ. 5,17,000/- (ரூபாய் ஐந்து இலட்சத்து பதினேழாயிரம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்து அரசு ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

4. மேலே ஐந்தாவதாக படிக்கப்பட்ட வேளாண்மை இயக்குநரின் கடிதத்தில், மேற்குறிப்பிடப்பட்ட அரசாணைகளில் தெரிவித்த வழிமுறைகளின்படி, செம்மை நெல் சாகுபடி தொழில் நுட்பத்தினை கடைபிடித்து மாநில அளவில் செம்மை நெல் சாகுபடி பயிர் விளைச்சல் போட்டியில் CR 1009 ரகம் சாகுபடி செய்து, எக்டருக்கு 13,800 கிலோ மகசூல் எடுத்துள்ள, திரு. செ. இராமசாமி, த/பெ. செல்லப்பன், பூலாம்பட்டி கிராமம், எடப்பாடி வட்டம், சேலம் மாவட்டம் அவர்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 2022-ஆம் ஆண்டு குடியரசு தினத்தன்று "திரு. சி. நாராயணசாமி நாயுடு நெல் உற்பத்தி திறனுக்கான விருதுடன்" ரூ.5 இலட்சம் சிறப்புப் பரிசு மற்றும் ரூ.7,000/- மதிப்புடைய பதக்கம் வழங்குவதற்கும், மேலும், அதற்கான பயணப்படி செலவினம் மேற்கொள்ள ரூ.6,000-/ உட்பட, ஆக மொத்தம் ரூ.5,13,000/-ஐ (பரிசு தொகை ரூ.5.00 இலட்சம் + பதக்கம் ரூ.7,000 + பயணப்படி ரூ.6,000) ஒப்பளிப்பு செய்திட அரசினைக் கோரியுள்ளார். மேலும், வேளாண்மை இயக்குநர் அவர்களுக்கு ஒப்பளிப்பு செய்யும் தொகையினை மதிப்பீடு செய்ய அதிகாரம் வழங்கவும் மற்றும் கணக்கு ஒத்திசைவு மற்றும் கட்டுப்பாட்டு அதிகாரியாக நியமிக்கவும், பயணப்படி செலவின தொகையினை வேளாண்மை இயக்குநர் மற்றும் சம்மந்தப்பட்ட வேளாண்மை இணை இயக்குநருக்கு முன்பணமாக வழங்க அதிகாரம் வழங்கவும் அரசினை கோரியுள்ளார்.

5. மேலே பத்தி 4-இல் உள்ள வேளாண்மை இயக்குநரின் கருத்துரு அரசால் கவனமுடன் பரிசீலனை செய்து 2020-2021 ஆம் ஆண்டு நெல் சாகுபடியில், மாநில அளவில் செம்மை நெல் சாகுபடி பயிர் விளைச்சல் போட்டியில் CR 1009 ரகம் சாகுபடி செய்து, எக்டருக்கு 13,800 கிலோ மகசூல் எடுத்துள்ள திரு. செ. இராமசாமி அவர்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர்

(த.பி.பா.)

அவர்களால், 2022- ஆம் ஆண்டு குடியரசு தின விழாவில் "திரு. சி. நாராயணசாமி நாயுடு நெல் உற்பத்தி திறனுக்கான விருதுடன்" ரூ.5,00,00/- (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) சிறப்புப் பரிசு மற்றும் ரூ.7,000/- மதிப்புடைய பதக்கமும், அதற்கான பயணப்படி செலவினம் மேற்கொள்ள ரூ.6,000/- உட்பட, ஆக மொத்தம் ரூ.5,13,000/-ஐ (ரூபாய் ஐந்து இலட்சத்து பதிமூன்றாயிரம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்து அரசு ஆணை வெளியிடுகிறது.

6. மேலே பத்தி 5-இல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட செலவினம் கீழ்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

"2401-00 பயிர் வளர்ப்பு - 109 விரிவாக்கப் பணியும் உழவர் பயிற்சியும் - மாநிலச் செலவினங்கள் - KI திருந்திய முறை நெல் பயிரிடுதலில் மிக அதிகமாக நெல் விளைச்சலை ஈட்டும் விவசாயிக்கு சிறப்பு விருது வழங்குதல்"

(ரூபாயில்)

| | | |
|---|---|---|
| (i) | 304 பயணச் செலவுகள் - 01 - சுற்றுப் பயணப் படிகள்<br>(த.தொ.கு: 2401-00-109 KI-30401) | ரூ.6,000/- |
| (ii) | 395 பரிசுகளும் வெகுமதிகளும் - 01 பரிசுகளும் வெகுமதிகளும்<br>(த.தொ.கு: 2401-00-109 KI-35901) | ரூ.5,07,000/- |
| | மொத்தம் | ரூ.5,13,000/- |

7. மேலே பத்தி 5-ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட செலவினத்தை மேற்கொள்ள வேளாண்மை இயக்குநருக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது.

8. இவ்வரசாணை, நிதித்துறையின் அ.சா.கு. எண்.143/2022, நிதி (வே-உ.ந) துறை, நாள். 07.01.2022-இல் பெறப்பட்ட ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

சி. சமயமூர்த்தி
வேளாண்மை உற்பத்தி ஆணையர்
மற்றும் அரசுச் செயலாளர்

பெறுநர்:
வேளாண்மை இயக்குநர், சென்னை-5.
திரு. செ. இராமசாமி, த/பெ. செல்லப்பன், பூலாம்பட்டி கிராமம், எடப்பாடி வட்டம், சேலம் மாவட்டம். (வேளாண்மை இயக்குநர் வழியாக)
மாநில முதன்மைக் கணக்காயர் (G&SSA), சென்னை - 18.
மாநில முதன்மைக் கணக்காயர் (E&RSA), சென்னை - 18.
மாநில முதன்மைக் கணக்காயர், சென்னை-18/(பெயரில்).
மாநிலக் கணக்காயர், சென்னை-18/(பெயரில்).
சம்பள கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை-8.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்.
உறைவிட தணிக்கை அலுவலர், மாநில முதன்மை கணக்காயர் அலுவலகம் (சமூகத் தணிக்கைப் பிரிவு), சென்னை-9.
நகல்:
மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் முதன்மை செயலாளர்-III, சென்னை-9.

(த.பி.பா.)

மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை-9.
வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசுச் செயலாளரின் முதுநிலை தனிச்செயலர், சென்னை-9.
நிதி (வேளாண்மை / வரவு செலவு பொது I (ம) II ) துறை, சென்னை-9.
பொதுத் துறை, சென்னை-9.
வேளாண்மை – உழவர் நலத் (பொது/வ&தி) துறை, சென்னை-9.
வேளாண்மை – உழவர் நலத் (அநமு3) துறை, சென்னை-9. (2 நகல்கள்) (அட்டவணைப்படுத்தும் வகைக்கு).
உதவி நிரலர், வேளாண்மை - உழவர் நலத் துறை, சென்னை-9.
இருப்பு கோப்பு / உதிரிகள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

19/1/22
பிரிவு அலுவலர்
19.01.2022